**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.14** |
| **Name** | **:** | திருமதி. தமிழிசைவாணி |
| **Husband's Name** | **:** | மோகனவேல் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.07.2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இறந்த சுரேசை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. ஆனால் நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியும்.

20.1.2017 அன்று இரவு 8 மணி அளவில் சுரேஷ் குடும்பத்தினருக்கும் ஆஜரான நாகப்பன் வகையறாவிற்கும் சண்டை நடந்தது. சண்டை

நடந்தபோது சுரேசின் அம்மா சுசீலா சுரேசை உள்ளே வைத்து கதவை தாழ்ப்பாள் போட்டு வைத்துக்கொண்டார். சுரேஷ் வெளியில் சென்றுவிடாமல் இருப்பதற்காக சுரேசின் இருசக்கர வாகனத்தின் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டு கதவை சாத்திக்கொண்டார்கள்.

சுரேஷ் வெளியில் விட சொல்லி சத்தம் போட்டதால் அரை மணி நேரம் கழித்து என் கணவரிடம் நான் சொல்ல என் கணவர் சுரேசிற்கு போன் செய்து இன்று இரவு போகவேண்டாம் என்று எதுவாக இருந்தாலும் காலையில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார். பிறகு சுரேசின் தாயார் சுரேஷ் சத்தம் போடுவதால் சாவி கொடுக்க சொன்னதால் என்னிடம் கேட்டார். நானும் கொடுத்தேன். அப்போது என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு கொடுத்துவிட்டேன்.

பிறகு பத்து நிமிடம் கழித்து என் மகன் காவாங்கரையில் இறந்து விட்டான் என்று சுசீலா மீண்டும் அழைத்ததால் என் கணவர் மோகனவேல் அங்கு சென்றார். நான் ஊரிலேயே இருந்துவிட்டேன். என் கணவர் எனக்கு போன் மூலம் சுரேஷ் இறந்ததை தகவல் கொடுத்தார்.

பிறகு நான் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பார்த்தேன். என் கணவர் சுரேஷ் எப்படி இறந்தார் என்று என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். வெட்டி போட்டிருப்பதாக சொன்னார். யார் வெட்டி போட்டதாக சொன்னார் என்றால் அதையெல்லாம் நான் கேட்கவில்லை. மேற்கண்ட சங்கதியை நான் யாரிடம் எல்லாம் சொல்லியுள்ளேன் என்றால் போலிசாரிடமும் ஊராரிடமும் சொன்னேன்.

**<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 1 மணிக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு போகும்போது போலிசார் அங்கு விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரி தான். அந்த நேரத்தில் என்னை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் அப்போது என்னை விசாரிக்கவில்லை.**

**மறுநாள் 21ஆம் தேதி காலையில் விசாரணை செய்தார்கள். 21ஆம் தேதி விசாரணை செய்தபிறகு என்னை போலிசார் எப்போதும் விசாரித்தது கிடையாது என்றால் சரி தான். நான் இதற்கு முன்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் சூப்பரவைசராக பணியில் இருந்தேன் என்றால் சரி தான். என்னை பணி நீக்கம் செய்துவிட்டனர் என்றால் நானாக வந்துவிட்டேன். என் இடத்தில் என் கணவரை சேர்த்துவிட்டேன்.**

**நானாகவே வந்துவிட்டபோது தலைவராக யார் இருந்தார் என்றால் நாகப்பனின் மனைவி அமுலரசி இருந்தார். நான் செய்த முறைகேட்டின் காரணமாக தான் நான் பணிநீக்கம் செய்யப்பட்டது என்றால் நானாக தான் வந்துவிட்டேன். முறைகேடு செய்திருக்கும்பட்சத்தில் எப்படி என் கணவர் என் இடத்திற்கு வரமுடியும் என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.**

**என் கணவர் மோகனவேல், இளையபாரதி மீது கொலை வழக்கு உள்ளது என்றால் மோகனவேல் மீது உள்ளது. இளையபாரதி மீது இல்லை. சுசீலா அம்மா அழைக்கும்போதே தன் மகன் காவாங்கரையில் இறந்துவிட்டார் என்று அழைத்தார் என்றால் சுசீலா அம்மா முதலில் சண்டை போடும்போதே எங்களை அழைத்தார்கள், நாங்கள் போகவில்லை. என் கணவர் மற்றும் சுசீலா**

எல்லாம் சென்றார்கள். சாட்சி தற்போது செத்துவிட்டான் என்று சொல்லவில்லை வெட்டி போட்டுவிட்டார்கள் என்று சொன்னார் என்று சாட்சியம் அளிக்கிறார்.

என் கணவர் மோகனவேல் எந்த கட்சியில் உள்ளார் என்றால் பிரதான கட்சியில் உள்ளார். பொறுப்பில் உள்ளாரா என்றால் இல்லை. அதற்கு முன்பு எந்த பதவியில் இருந்தார் என்றால் அந்த பிரதான கட்சியில் கிளை செயலாளராக இருந்தார். என் கணவரின் கிளை செயலாளர் பதவியில் தான் 1ம் எதிரி நாகப்பனை போட்டார்கள் என்றால் சரி தான். காரணம் என் அப்பா ஒன்றியமாக இருந்ததால் ஒரே வீட்டில் இரண்டு பதவி இருக்கக்கூடாது என்று என் கணவர் பதவியை நாகப்பனுக்கு கொடுத்தார்கள்.

அதன்பிறகு என் கணவருக்கும் 1ம் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் இல்லை. என் கணவர் கட்சியிலேயே இல்லை. சுரேசின் இருசக்கர வாகனத்தின் சாவியை என்னிடம் கொடுத்தது சம்பந்தமாகவும், என் கணவர் சுரேசிற்கு போன் செய்து இன்று செல்லவேண்டாம் என்று சொன்னது சம்பந்தமாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி தான்.

சுரேஷ் என்பவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றுக்கொண்டு இருக்கும்போது ஆற்றங்கரை வளைவில் விபத்து ஏற்பட்டோ விலங்குகள் குறுக்கே வந்து விழுந்து காயம் ஏற்பட்டு இறந்துள்ளார் என்றாலும், ஏற்கனவே எதிரிகளுக்கும் சுரேசிற்கும் உள்ள முன்விரோதத்தை வைத்து கொடுக்கப்பட்ட எதிரிகள் மீதான பொய்யான புகாரின் பேரில் என் கணவரின் அறிவுறுத்தலின்பேரில் நான் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பார்த்தவற்றை தான் சாட்சியம் அளித்துள்ளேன்.

7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முறைகேட்டினால் என்னை பணிநீக்கம் செய்யப்பட்ட பிறகு கனகா என்ற மாற்று திறனாளி ஒருவரை பணியில் அமர்த்தினார்கள் என்றால் எனக்கு என் கணவர் அதற்கு பிறகு கனகா பணி செய்த பிறகு தற்போது நானும் கனகாவும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறேன். முறைகேட்டில் பணிநீக்கம் செய்யப்பட்ட என்னை எப்படி மீண்டும் பணி அமர்த்துவார்கள் என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.

என்னை மீண்டும் பணி அமர்த்திய தலைவர் யார் என்றால் நித்யா. ஆனால் நித்யா எனக்கு பணி கொடுக்கவில்லை. வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தான் எனக்கு பணி உத்தரவு வருகிறது. சுரேசை வீட்டின் உள் கதவை சாத்தி இருந்ததால் சுரேஷ் அப்போது ஆக்ரோஷமாக இருந்தார் என்றால் ஆக்ரோஷமாக இல்லை. வீட்டின் உள் சாத்தப்பட்டிருந்தார். வீட்டின் உள் இருந்ததால் எப்படி இருந்தார் என்றால் போனில் பேசும்போது சாந்தமாக தான் பேசினார்.

போனில் பேசிய பிறகும் எங்கள் பேச்சை மீறி தான் சுரேஷ் சென்றார் என்றால் சரி தான். புகார் கொடுக்க தான் சென்றார். புகார் கொடுக்க தான் சுரேஷ் சென்றார் என்பதை போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரி தான். விபத்தினால் ஏற்பட்ட மரணத்தை என் கணவர் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் எல்லாம் சேர்ந்து கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>சாட்சி தானாகவே இந்த வழக்கை பற்றி தான் சொல்லவேண்டும் என்று நீதிமன்றத்தில் கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>

நான் நேற்று பணி செய்துவிட்டு வந்துக்கொண்டிருக்கும்போது இரவு 8.30 மணியில் இருந்து 9 மணி வரை 1ம் எதிரி நாகப்பன் என் தொலைபேசியில் கால் செய்துக்கொண்டு இருந்தார். அப்போது என்னை மாங்கால் கூட்ரோட்டிற்கு வர சொல்லி அழைத்தார். நான் மாங்கால் கூட்ரோட்டில் 1ம் எதிரி நாகப்பனை பார்த்தேன். அவரை தவிர்ப்பதற்காக வேண்டி அவரை பார்க்காமல் சென்றுவிட்டேன்.

அவர் போனில் பேசியதை வைத்து பார்க்கும்போது அவர் குடித்திருந்தார். மீண்டும் போன் செய்து வர சொன்னார். நான் என்ன என்று கேட்டதற்கு நான் எங்கு இருக்கிறேனோ அங்கேயே காத்திருக்க சொன்னார். அதற்கு நான் வீட்டிற்கு வந்து பார்க்கும்படி சொல்லிவிட்டேன். வீட்டிற்கு வந்தவுடன் போன் செய்தபோது என்னை சாப்பிட அழைத்தார். அதற்கு நான் மறுத்தேன். இது சம்பந்தமாக என் கணவரிடம் நான் தெரிவித்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை.</u>

சம்பவம் நடந்த காலத்திற்கு பிறகும் தற்போது வரையும் 1ம் எதிரி நாகப்பன் என்னிடமும் என் கணவரிடமும் சாதாரணமாக பேசுவார் என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.